
தொகுதி உ
சித்திரம் ௧

பொன்னிவளநாட்டின்
வீர சரித்திரம்



# கோவில் ரகசியம்


www.ponnivala.com

© 2012 Ponnivala Publishing

தொகுதி-2
சித்திரம்-01

# ஆண்குழந்தைகள் மறைந்த மாயம்

சதிகார பங்காளிகளின் தூண்டுதலினால், மருத்துவச்சி குப்பி, பொன்னிவள நாட்டு தம்பதிகளுக்குப் பிறந்த ஆண் குழந்தைகளை கொல்ல சதி செய்கிறாள். ஆனால், அவர்கள் செல்லாத்தாவாள் காப்பாற்றப்பட்டு, யானைப்பாலையும், புலிப்பாலையும் பருகி, வலிமையுடையவர்களாக வளர்க்கின்றனர். அவர்களுக்கு பின் பிறந்த பெண் குழந்தையை, தமது ஒரே வாரிசு என்று எண்ணி, தம்பதியினர் அன்புடன் வளர்க்கின்றனர்.






மறுவர்ணனை
பிரெண்டா பெக். இ கசாண்ரா கொர்நால்

தமிழாக்கம்
சிவசங்கர் நவரட்ணம்
சத்தியபாமா

சித்திரங்கள்
ரவிசந்திரன் & குழு

வடிவமைப்பு
பிரியா கோவிந்தராஜன்
ஸ்டெப்பான் ஹானிஹன்

ஓப்பச்சர்
முலர்விழி ராஜ்

வெளியீட்டாளர்
பொன்னிவளா பப்ளிகேசன்



© 2012
சாப்ட்சைன்ஸ் அசோசியேசன் லிமிடட்.





விஷ்ணு நடந்தவைகளை நினைத்தார்.
குன்னுடையானும், தாமரையும், சிவனின் சோதனைகளை வெற்றிகரமாக தாண்டி, குழந்தை வரத்தை பெற்றுவிட்டனர். இப்போது தாமரை நிறைமாத கர்ப்பினியாக உள்ளாள்.
இனிமேல் என்ன நடக்கும் என்று பொறுத்திருந்து பார்ப்போம்.


பொன்னிவள நாடு, குன்னுடையானின் நல்லாட்சியில் சிறப்புற்று விளங்கியது.


குலதெய்வமான செல்லாத்தாளுக்கு மூன்று வேளையும் பூஜை தவறாமல் நடந்தது.
விரைவில் நமக்கு குழந்தை பிறக்கவுள்ளது.
ஆமாம்! நமக்கு குழந்தையில்லை என்ற பழிச் சொல் இத்தோடு நீங்கியது.
குன்னுடையான், தாமரைக்கு தன் பூர்வீக கதையை செல்லத் தொடங்கினார்.
எனது தந்தையார் வாழ்ந்த காலத்தில், சோழநாடு கொடிய பஞ்சத்தை சந்திக்க நேர்ந்தது.
பஞ்சத்தின் காரணமாக, சோழ மன்னனால் தன் பசுக்களுக்கு உணவளிக்க முடியாமல், அவைகளை அவிழ்த்து விட்டான்.



அந்த பசுக்கள் பொன்னிவளநாட்டை நோக்கிச் சென்று, எனது தந்தையின் கரும்புத் தோட்டத்தில் புகுந்தன.
பசியுடன் இருந்த பசுக்கள், கரும்புத் தோட்டத்தில் புகுந்து மேய்ந்தன. இதையறியாத என் தந்தை, தோட்டம் அழிக்கப்பட்டதை கண்டு, அதை பாதுகாக்க எண்ணினார். அதற்காக..
கரும்புத்தோட்டத்தை சுற்றி வேலி ஒன்றை அமைத்தார்.
மீண்டும் பசியுடன் வந்த பசுக்கள், அந்த வேலியை தாண்டும் முயற்சியில் தோல்வியடைந்து, இறந்து போயின.


இறந்து மேலுலகம் சென்ற பசுக்கள், சிவனிடம் முறையிட்டன.
இதனால்! சினமடைந்த சிவன்...
ஏழு தலைமுறைக்கும் குழந்தையில்லா கொடுஞ் சாபத்தை கொடுத்தார்.




தம்பதியினர் மிக மகிழ்ச்சியுடன், பிறக்கப் போகும் குழந்தைகளுக்காக காத்திருந்தனர்.


ஆனால், தங்கவள நாட்டில் வாழும் குன்னுடையானின் பங்காளிகள், அவர்களின் சந்தோசத்தை அழிக்க சதிச் செயலில் ஈடுபட்டனர்.
தாமரை கர்ப்பமாக இருக்கும் செய்தியறிந்ததும், அவர்கள் பிள்ளையார் கோவிலில் ஒன்று கூடினார்கள்.
தாமரை கர்ப்பமாக இருக்கிறாள், நாம் என்ன செய்வது?
நீ போய் பிரசவம் பார்க்கும் குப்பியை கூட்டி வா!
சரி! அப்படியே செய்கிறேன்!


குப்பி! தாமரை உன்னை பிரசவம் பார்க்க கூப்பிடுவாள். அவளுக்கு, ஆண்குழந்தை பிறந்தால் அதைக் கொன்று விடு, பெண்குழந்தை பிறந்தால் அதை உயிருடன் விட்டு விடு.
சரி!
இதை, நீ செய்தால் உனக்கு கூலியாக பொன்னிவள நாட்டில் கிடைக்கும் செல்வத்தில் பங்கு தருவோம்.
பங்காளிகள், குன்னுடையானுக்கு பின் பொன்னிவள நாட்டை தாங்களே எடுத்துக் கெள்ள எண்ணி, அவருடைய வாரிசுகளை அழிக்க திட்டம் தீட்டினர். இதை, விஷ்ணு மேலே இருந்து பார்த்துக் கொணடு இருந்தார்.
ஆ!.. பங்காளிகள் மீண்டும் தெல்லை கொடுக்க தொடங்குகிறார்களே!
விஷ்ணு, பங்காளிகளின் திட்டத்தை கேட்டு, வேகமாக பொன்னிவள நாட்டை நோக்கி தன் கருட வாகனத்தில் பறந்து வந்தார்.
இந்த சதி திட்டத்தை உடனே தடுத்து நிறுத்த வேண்டும்.


விஷ்ணு, செல்லாத்தா கோவிலை நோக்கி வந்தார்.
செல்லாத்தா! செல்லாத்தா!
குன்னுடையானின் குடும்பத்திற்கு பெரும்பிரச்சினை வரப் போகிறது!
எப்படி! என்னவாயிற்று அண்ணா!
நான் என்ன செய்ய வேண்டும்?
நீ, குன்னுடையானின் அரண்மனைக்கு இங்கேயிருந்து ஒரு சுரங்கப்பாதை அமைக்க வேண்டும்.
செல்லாத்தாள் உடனே சுரங்கம் தோண்ட தொடங்கினாள்.


பொன்னிவள நாட்டில் காலைப்பொழுது இனிதே புலர்ந்தது.
நாட்டில் நஞ்சையும், புஞ்சையும் செழித்து, எங்கும் பசுமையாக காணப்பட்டது.
யானைகளை கொண்டு நெல் தாம்பாடப்பட்டது!
தாமரையின் குழந்தைப்பேறு காலம் நெருங்கி வந்தது.


தாமரைக்கு பிரசவ வலி ஏற்பட்டு, வலி தாங்க முடியாமல் கணவனை அழைத்தாள்.
ஆ...! ஐயோ...!
ஐயோ...! யாராவது சென்று என் கணவரைக் கூட்டி வாருங்களேன்!
ஆ....! வலிக்கிறதே!
சீக்கிரம் சென்று பிரசவம் பார்க்கும் குப்பியைக் கூட்டி வாருங்கள். எனக்கு வலி அதிகமாகி விட்டது.
இதோ! செல்கிறேன்!
குன்னுடையான் குப்பியை கூட்டி வர, மதிய வேளையில் கொளுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாமல் தங்கவளநாட்டை நோக்கி ஓடினார்.



தங்கவளநாடு சென்ற குன்னுடையான், அங்கிருந்த பங்காளிகளைப் பார்த்தார்.
சகோதரரே! பிரசவம் பார்க்கும் குப்பியை என்னுடன் அனுப்பி வையுங்கள்!
நிச்சயமாக அனுப்பி வைக்கிறோம்!
இப்பொழுதே சென்று கூட்டி வருகிறேன்!
என்ன? தாமரைக்கு பிரசவ வலி வந்து விட்டதா?
ஆமாம் குப்பி! வலியால் துடிக்கிறாள்! சீக்கிரம் என்னுடன் வா!
குப்பி..! குப்பி..! நினைவிருக்கட்டும்...
நாங்கள் சொன்னதை செய்ய ஒரு போதும் மறக்க வேண்டாம்!
குன்னுடையான், குப்பியுடன் வேகமாக அங்கிருந்து புறப்பட்டார். தாமரை வலியால் துடிப்பதால் பதட்டத்துடன் குப்பியை வேகப்படுத்தினார்.
வேகமாக வா குப்பி!


ஐயோ... வலி உயிர் போகுதே..!
தாமரைக்கு வலி அதிகம் போல, துடிக்கிறாளே!
ஆமாம்! நீ சீக்கிரம் அவள் அறைக்குப் போ!
தாமரை! பயப்படாதே நான் வந்து விட்டேன்.
ஊ..! ஆ..!
குப்பி, தாமரையின் அறைக்குச் சென்று, பங்காளிகள் கூறிய திட்டத்தை நிறைவேற்ற தயாரானாள்.


இதை அறிந்த விஷ்ணு, வெகு விரைவில் செல்லாத்தா கோவிலை நோக்கி சென்றார்.
தாமரைக்கு குழந்தை பிறக்கும் நேரம் நெருங்கி விட்டது. சீக்கிரம் சுரங்கப்பாதை வழியாக அவள் அறைக்குச் சென்று விடு!
நான் அழைக்கும் வரை நீ அங்கேயே காத்திரு!
உடனே விஷ்ணு, ஈயின் வடிவமெடுத்து தாமரையின் அறைக்குச் சென்று கூரையில் மறைந்திருந்தார்.
புஸ்ஸ்ஸ்!


குப்பி, தன் திட்டத்தை நிறைவேற்ற தயாரானாள். முதல்வேலையாக, துணியை கொண்டு தாமரையின் கண்களைக் கட்டினாள்.
குப்பி! வலி பொறுக்க முடிய வில்லையே!
பொறு தாமரை! இந்தக் கயிற்றை வலி வரும் போதெல்லாம் பிடித்துக் கொள். வலியைத் தாங்க உதவியாக இருக்கும்.
இது உனக்கு முதல் பேறுகாலமாக இருப்பதால், நான் உன் கண்களை கட்டி விடுகிறேன்.
தாமரையின் கண்களைக் கட்டிய குப்பி, எதிரில் இருந்த அறைக்குச் சென்று தன்னிடம் இருந்த கத்தியை எடுத்து தீட்டத் தொடங்கினாள்.


இது தான் சரியான நேரம்!
குப்பி சென்றவுடன், ஈயான விஷ்ணு தன் உருவத்தை மாற்றிக் கெண்டு தாமரையின் அருகில் சென்றார்.
சீக்கிரம்! குப்பி வருவதற்குள் காரியத்தை முடிக்க வேண்டும்.
விஷ்ணு தன் சக்தியை தாமரையின் வயிற்றின் மேல் பிரயோகித்தார்.


அதன் காரணமாக இரண்டு அழகான ஆண்குழந்தைகள், வேல்கம்புடனும், கத்தியுடனும் பிறந்தார்கள்.
இருவரும் குப்பியைத் தாக்குவதற்காக தேடிச் சென்றார்கள்.


அவர்களிடம் அகப்பட்ட குப்பியை நன்றாக உதைத்தார்கள்.
ஐயோ! யாரது?
ஐயோ...!
என்னைக் காப்பாற்றுங்கள்!
இரண்டாவது மகன் குப்பியின் முதுகில் இருந்த கூனலில் எட்டி உதைத்தான்.
அந்த உதையால் அவளுடைய பதினெட்டு முடிச்சு கூனும் நீங்கி உடல் நிமிர்ந்தது.


குழந்தைளே!
இங்கே
வாருங்கள்!
விஷ்ணு, அவர்களை அழைத்துக் கொண்டு தாமரை இருக்கும் அறைக்குச் சென்றார்.


தாமரையின் அறையில் இருந்த சுரங்கம் அருகே சென்ற விஷ்ணு செல்லாத்தாளைக் அழைத்தார்.
செல்லாத்தா..! செல்லாத்தா..!
இவர்களை உன்னுடன் வைத்துக் கொள்.
சுரங்கம் வழியாக வந்த செல்லாத்தா அந்த இரட்டை குழந்தைகளை தன்னுடைய இடத்திற்கு எடுத்துச் சென்றாள்.



செல்லாத்தா அந்தக் குழந்தைகளை தன் கோவிலுக்கு அடியில் உள்ள குகைக்கு அழைத்துச் சென்றாள்.


குழந்தைகள் குகையில் இருந்த புலியுடன் நட்பாகி விளையாடி மகிழ்ந்தனர்.


அதேசமயம் மயக்கம் தெளிந்த குப்பி, தாமரை இருக்கும் இடத்திற்குச் சென்றாள். தாமரைக்கு மீண்டும் வலி ஏற்பட்டு, ஒரு பெண் குழந்தை பிறந்தது.
ஆ..! பெண் குழந்தை பிறந்துள்ளது!
குப்பி குழந்தையை குளிக்க வைத்து, ஆடை அணிவித்து தாமரை அருகில் படுக்க வைத்தாள்.
வ்வவவவா...
தாமரை! தாமரை!


குப்பி, தாமரையின் கண்களை கட்டியிருந்த துணியை அவிழ்த்து விட்டாள்.
தாமரை! இது உனக்கு பிறந்த பெண் குழந்தை!
சிவனே! எனக்கு இரண்டு ஆண் குழந்தை பிறப்பதாக வரம் அளித்தீர்களே?
ஆ....!
உனக்கு முதலில் இரண்டு துஷ்டஆவிகள் பிறந்து வெளியே ஓடிவிட்டன. அதன் பின் இந்த குழந்தை பிறந்தது.
தாமரை தனக்கு பிறந்தது ஒரு பெண்குழந்தை என்றவுடன் மனமுடைந்து அழத் தொடங்கினாள்.
ஐய்யோ! நான் என்ன பாவம் செய்தேன் இப்படி நடந்து விட்டதே!
கவலைப்படாதே அம்மா! விதியை யாராலும் மாற்ற முடியாது.
பரந்தாமா! நான் செய்த தவறு தான் என்ன?


குன்னுடையான், அறையினுள் தாமரை அழுவதைப் கேட்டு கலக்கம் அடைந்தார். அப்போது, வெளியில் வந்து குப்பி நடந்ததை கூறினாள்.
குப்பி! என்னாச்சு?
சாமி! தாமரைக்கு முதலில் இரண்டு துஷ்ட ஆவிகள் பிறந்து ஓடி விட்டன. அதற்கு பின் ஒரு பெண் குழந்தை பிறந்துள்ளது.
கவலைப்படாதே தாமரை! சிவன் வரமளித்தபடி இரண்டு ஆண் வாரிசுகளை தராவிட்டாலும், ஒரு அழகான பெண்குழந்தையை கொடுத்துள்ளார்.
அவளை நன்றாக வளர்த்து, சந்தோசமாக வாழ்வோம்.
குன்னுடையான், தாமரையை சமாதானம் செய்தார். இருவரும் அவர்களுக்குக் பிறந்த பெண் குழந்தையை நினைத்து சந்தோஷப்பட்டனர்.


அவர்கள் பெண் குழந்தையை சீறும் சிறப்புமாக பாசத்துடன் சீராட்டி வளர்த்தனர்.
தாமரைக்கு குழந்தைக்கு சாதம் ஊட்டுவதிலும், அவளோடு கொஞ்சி விளையாடுவதிலும் பொழுதுகள் கழிந்தது.


விரைவில், குழந்தைக்கு பெயர் சூட்டும் விழா ஏற்பாடானது.
சேவகா! குழந்தைக்கு பெயர் சூட்டும் விழாவிற்கு அனைத்து கிராம மக்களுக்கும் அழைப்பு விடுத்து வா!
சரி சாமி!
அனைத்துக் கிராமமக்களையும் விழாவிற்கு அழைத்தனர். பணியாட்கள் அரண்மனையை அலங்காரம் செய்தனர்.


குன்னுடையான் அதிகாலையில் எழுந்து குளித்துவிட்டு, குலதெய்வக் கோயிலுக்கு புறப்பட்டார்.



செல்லாத்தா! எங்களை ஆசீர்வதித்து காக்க வேண்டும்!





பூசாரிகளை விழாவிற்கு அழைத்து வந்து பூஜைகளை ஆரம்பித்தனர்.





விழாவில் கலந்துகொண்ட, கிராமத்து மக்கள் அனைவருக்கும் பூவும், பழமும் வழங்கப்பட்டது.
விழா இனிதே தொடங்கியது!
குழந்தையின் காதில் அதன் பெயரை மூன்று முறை கூறுங்கள்.
தங்காள்! தங்காள்! தங்காள் !


விழா முடிவில் பூசாரிகளுக்கு சன்மானம் கொடுத்தனர்.
மிக்க நன்றி!




பிரசவம் பார்த்த குப்பி, விழா முடிந்தவுடன் விடைபெற்றாள்.
மிக்க நன்றி குப்பி! சென்று வா!
என் வேலை முடிந்தது. நான் சென்று வருகிறேன்.
தங்கவள நாட்டை சென்றடைந்த குப்பியை கண்ட பங்காளிகள்...
குப்பி! சொன்னதை செய்தாயா?
ஆமாம்! நீங்கள் சொன்னபடியே தான் செய்தேன்!
ஆமாம்! உன் பதினெட்டு கூனுக்கு என்னாயிற்று? பொய்யா சொல்ற! எடு அந்த அருவாளை!
ஐய்யோ! என்னை விட்டு விடுங்கள்!
குப்பி! நாங்கள் சொன்னதை ஏன் செய்யவில்லை! இங்கிருந்து உடனே சென்றுவிடு! எங்கள் கண் முன்னே நிற்காதே!
எனக்கு எதுவும் வேண்டாம். இனி இந்தப் பக்கமே வரமாட்டேன்.
பங்காளிகள் மிரட்டியதில் பயந்த குப்பி தங்கவளநாட்டை விட்டே ஓடினாள்.



செல்லாத்தாலின் குகையில் இரண்டு குழந்தைகளும் சந்தோஷமாக இருந்தனர்.
இரண்டு குழந்தைகளும், பிறந்ததில் இருந்து அவர்களின் உண்மையான பெற்றோர்கள் யாரென்று தெரியாமல் வளர்ந்து வந்தனர். செல்லாத்தாவின் யானையுடன் விளையாடி, புலியின் பாலைக் குடித்து மிகவும் பலமுடையவர்களாக இருந்தனர். எதிர் காலத்தில், அவர்களால் தங்களின் தாய், தந்தையர் யார் என்று அறிய முடியுமா? இல்லை, அறியாமலே இருக்க போகிறார்களா?

# பொன்னிவளாவை பற்றி ஒரு சிறு தொகுப்பு

பொன்னிவளா ஒரு புரதான பண்டை கால கதை. இக்கதை கிராமத்து உடுக்கை பாடகர்களால் இன்றும் ஆடலும், பாடலுமாக சொல்லப்படும் ஒரு பழங்கதையாகும்.

1965 வருடம் கொங்கு நாட்டில் உள்ள மின்வசதி இல்லாத சிறு கிராமத்தில், ஒலி நாடாவை கொண்டு, 18 இரவுகளில் ஒலி பதிவு செய்யப்பட்ட கதையாகும். முதன் முறையாக, கம்யூட்டர் 2D அனிமேஷனில் 26 தொலைக்காட்சி தொடர்களாக ஊருவாக்கப்பட்டு, பல மொழிகளில் பதிவு செய்யப்பட்டது.

ராஜாங்கம் என்பது அதன் மக்களால்தான் கட்டமைக்கப்படுகிறது. உதாரணமாக குடையுன் பரந்து விரிந்த மேல்பகுதி ராஜாங்கம் என்றால், மக்கள்தான் அதனை தாங்கி நிற்கும் கம்பிகள்.

எனவே ஒரு ராஜாங்கத்தைப்பற்றி சொல்லவேண்டும் என்றால், அந்த ராஜாங்கத்தின் மக்களை பற்றியும் சொல்லவேண்டும். அப்போதுதான் அந்த ராஜாங்கத்தைப்பற்றி முழுமையாக புரிந்து கொள்ள முடியும். இக்கதை கொங்கு மக்களின் கதை. இக்கதை தோராயமாக ஆறாம் நூற்றாண்டில் கொங்கு மக்களின் வாழ்க்கை முறையையும், அவர்களின் சமுதாய மற்றும் நாகரீக வாழ்க்கையையும் சித்தரிக்கிறது.



மேலும் பொன்னிவளாவைப்பற்றி விபரம் அறிய பொன்னிவள இணைய தளத்திற்கு செல்லுகள்
www.ponnivala.com/comic14tamil




வாருங்கள்!

# பொன்னிவள

அங்காடிக்கு

சித்திரக்கதை - HD அனிமேஷன் - விளையாட்டு - வாணிக பொருட்கள் - கேளிக்கை - மேலும் பல இலவசங்கள்!







01. காராளர் தோற்றம்
02. அநாதைச்சிறுவன்
03. நாடு கடத்தல்
04. உரிமையுள்ள காதலி
05. அதிசய கல்யாணம்
06. வருத்த விதை
07. ஆயிரம் யாசகர்கள்
08. கொடிய சாபம்
09. உத்தமியின் கோபம்
10. விரக்தியுன் பலன்
11. சாப நிவர்த்தி
12. சொர்க வாசல்
13. விதியின் கணக்கு
14. கோவில் ரகசியம்
15. உண்மை தெரிந்தது
16. நாடு திரும்புதல்
17. மானம் பெரிதென்று
18. சினம் கொண்ட சின்னவர்
19. சுதந்திரம் வென்றது
20. ஆசீர்வதிக்கப்பட்ட வாள்
21. சாம்புகனின் தந்திரம்
22. புதிய சவால்
23. நேருக்கு நேர்
24. எதிரியின் சவால்
25. பெரும் தியாகம்
26. ஒரு சகாப்தம் முடிந்தது

## 26யும் பெற்றுகொள்ள!

www.ponnivalamarket.com

மேலும் விபரங்களுக்கு இணைய தளத்திற்கு செல்க:

www.ponnivala.com


ISBN 978-1-927093-55-9



© 2012 Ponnivala Publishing